சொல்லியிருக்கிறேன். இணையம் வங்கிகளில் கடன் வாங்கி, திரும்ப சங்கத்திற்குக் கொடுக்கிறது. இப்பொழுது வட்டி, அபராத வட்டியை எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நீங்கள் கேட்பது பொருத்தமாக இல்லை. ஏற்கெனவே அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களின் சம்பள விகிதங்கள் எல்லாம் மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. பல சங்கங்களின் தன்னிலை உயர்கின்ற நிலை இன்றைக்கு உருவாகி இருக்கிறது. எதிர்காலத்திலே என்ன செய்ய முடியும் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துதான் இதிலே முடிவெடுக்க முடியும்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

117—

சுற்றுலாத் தலம்

***57349—திரு. எம்.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, முட்டல் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலாத் தலங்களின் முக்கியத்துவம் மற்றும் அங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளினுடைய எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, அங்கு தேவையான சுற்றுலா அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, முட்டல் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்துதரும் கருத்துரு எதுவும் சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கும், தலைவாசல் சட்டமன்றத் தொகுதிக்கும் மத்தியிலே உள்ள கல்லநத்தம் ஊராட்சி, முட்டல் பகுதி, மத்தியிலே உள்ள பகுதி. அந்த இரண்டு தொகுதிகளும் கிட்டத்தட்ட 4 இலட்சம் மக்கள் தொகை உள்ள பகுதி. அந்தப் பகுதிக்கு எந்தவிதமான ஒரு சுற்றுலாத் தலமும் இல்லை. ஆகையினால், அப்படிப்பட்ட அந்த முட்டல் பகுதியில் ஒரு பூங்காவையோ, அல்லது பொழுதுபோக்குகின்ற இடம் ஏதாவது ஒன்றையோ அமைக்க வேண்டும். அங்கே அது கல்வராயன் மலையினுடைய அடிப்பகுதியிலே அமைந்துள்ளது, குளிர்ச்சியான இடமாக இருந்து வருகிறது. திருவிழாக் காலங்களில் பொதுமக்கள் முட்டல் ஏரிப் பகுதிக்குச் சென்று பொழுதுபோக்கி வருகின்றார்கள். எனவே, முட்டல் ஏரிப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக மாற்றி, படகு இல்லம், பூங்கா போன்றவை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டல் ஏரிப் பகுதியில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றபோது, நிச்சயமாக அந்தத் துறையின் சார்பாக அங்கே அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

திரு. எம்.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பிரபலமான சுற்றுலாத் தலங்கள் விரிவுபடுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே சிறப்புக் கவனம் செலுத்தி, சுற்றுலாப் பூங்கா அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அதேபோல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பத்திரப்

[2010 ஏப்ரல் 28

பதிவுக்கும் அமைச்சராக இருக்கின்ற காரணத்தினால், சேலம் கிழக்கு மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தை ஆத்தூருக்கு அமைத்துத் தருவார்களா எனத் தாங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் துணைக் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டல் ஏரிப் பகுதியைப் பொறுத்தமட்டில், அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றபோது நிச்சயமாகத் துறையின் சார்பாக மேம்படுத்தப்படும். அதேநேரத்தில் அறிமுகமாகாத சுற்றுலா இடங்களும் இந்தத் துறையின் சார்பாக அறிமுகப்படுத்தப்பட்டு அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்ற காரணத்தினால், அங்கே அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்து கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அறிமுகம் செய்யாத இடங்களும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையிலும், முட்டல் ஏரிப் பகுதியில் வருங்காலத்தில் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய ஆர்வத்தின் அடிப்படையிலும் மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்துருக்களைப் பெற்று பூங்கா அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

திரு. பெ.சு. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குச் சுற்றுலா என்பது அவசியமான ஒன்றாகும். இயந்திரமயமான இந்த Computer உலகத்திலே சுற்றுலா மிக மிக அவசியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. பெ.சு. விஜயகுமார்: சாத்தனூர் அணை, திருவண்ணாமலை ஆகியவை வெளிநாட்டினர் வந்து போகின்ற இடங்கள். படவேடு, செண்பகத்தோப்பு, அமிர்தி வன விலங்குப் பூங்கா, - இப்பொழுதுகூட மத்திய அரசாங்கம் இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது - ஜமுனாமரத்தூர், வேலூர் இப்படிப்பட்ட பகுதிகளை ஒன்றாகச் சேர்த்து ஒரு சுற்றுலாத் தலமாக அறிவித்து,

2010 ஏப்ரல் 28]

அந்தச் சாலையை 40 அடிச் சாலையாக உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் அந்தப் பகுதியில் சுற்றுலா இடங்களை மேம்படுத்த வேண்டும் என்ற மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் இதுவரை சுற்றுலா அலுவலகம் இல்லாமல் இருந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்புதலோடு கடந்த நிதிநிலை ஆண்டில் சுற்றுலா அலுவலகம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அது இப்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, அந்த அலுவலர்கள் மூலமாக அங்கு செய்ய வேண்டிய பணிகளுக்கான கருத்துருக்களைப் பெற்று வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சாவரம் சுற்றுலாப் பகுதிக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வருகின்ற காரணத்தினால், விசைப் படகுகளும் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குப் போதுமான விடுதிகளும் இல்லாத பற்றாக்குறை உள்ளது. எனவே, கூடுதல் விசைப் படகுகளும், கூடுதல் பயணியர் விடுதிகளும் ஏற்படுத்த, வனப் பகுதியில் அமைந்துள்ள அந்தப் பயணிகள் விடுதியைச் சுற்றுலாத் துறையே எடுத்து, அதைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா? அந்தப் பிச்சாவரம் சுற்றுலா மையத்தை அழகுபடுத்த அரசு இன்னும் அதிக நிதி ஒதுக்கீடு செய்து தருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

[2010 ஏப்ரல் 28

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிச்சாவரம் பகுதியைப் பொறுத்தமட்டில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதி. இருந்தாலுங்கூட, சுற்றுலாத் துறையின் சார்பாக, அந்தப் பகுதியில் படகு வசதி செய்யப்பட்டு வருகிறது. இப்பொழுதும் அது நடந்துகொண்டிருக்கிறது. பிச்சாவரம் பகுதிக்குட்பட்ட பகுதிகளில் இருக்கக்கூடிய அந்த அறைகளெல்லாம், கடந்த காலத்தில் சுற்றுலாத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்தன. ஓர் ஒப்பந்த அடிப்படையில் அவ்வாறு இருந்தன. அந்த ஒப்பந்தம் முடிவுபெற்ற பிறகு, வனத் துறையிடம் ஒப்படைக்க வேண்டிய கடமை, இந்தத் துறைக்கு இருந்தது. அந்த அடிப்படையில், இப்போது வனத் துறை அதைப் பராமரித்து வருகிறது. அதையே அங்கு வருகின்ற பயணிகளும் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வாய்ப்பும் அங்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன்.

திரு. கோ. ஐயப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் கடற்கரை வெள்ளிக் கடற்கரை என்று பெயரிடப்பட்டு, சென்னை மெரினா கடற்கரையை அடுத்து அதிக மணற்பரப்பைக் கொண்ட பகுதி. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும் இரண்டு மூன்று முறை அங்கே வருகைபுரிந்து நேரடியாக அந்தப் பகுதிகளைப் பார்த்திருக்கின்றார்கள். அங்கே உணவகம், தங்குமிடம், பூங்காக்கள், நீரூற்றுகள், நடைபாதைகள் போன்றவை அமைத்துச் சுற்றுலாப் பகுதியாக்க வேண்டுமென்ற கோரிக்கையை பொதுமக்கள் அங்கேயே வைத்தார்கள். கடலூர் மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கின்ற அந்த வெள்ளிக் கடற்கரையை, அதிக மணற்பரப்புக் கொண்ட கடற்கரையை, சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருவதற்கு வாய்ப்பாக அங்கே தேவையான உணவகம், தங்குமிடம் போன்றவற்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தந்து உதவுவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய கடற்கரைப் பகுதிகளை அழகுபடுத்த வேண்டும் என்பதும், அந்தப் பகுதியில்

2010 ஏப்ரல் 28]

விடுதிகள் அமைக்க வேண்டும் என்பதும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை. ஆனால் எங்களைப் பொறுத்தவரையில், இந்தத் துறையின் சார்பாக, இந்தத் துறைக்குச் சொந்தமான இடம் எதுவும் இல்லை. இருந்தாலுங்கூட, கடற்கரையை மேம்படுத்தக்கூடிய அளவிற்குத் துறை பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

118—

நெல் கொள்முதல் நிலையம்

***33687—திரு. தி. இராமசாமி:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்புப் பேரூராட்சியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பில் 2009-2010 ஆம் ஆண்டு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதுவரை கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் அளவு 33 டன்கள் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.*

திரு. தி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்திற்கு 11 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய முறையில் ரூ.1,082 கோடியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் எங்கள் மாவட்ட அமைச்சர் பெருமக்களுக்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வத்திராயிருப்பில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS